## தேசிய லொத்தர் சபை

## நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## <u>வெற்றிடங்கள்</u>

தேசிய லொத்தர் சபையானது (NLB) 1963/11 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டு நிதி அமைச்சின் கீழ் செயற்படுகின்ற அரச லொத்தர் துறையில் முன்னணி வகிக்கின்ற ஒரு நிறுவனமாகும். தேசிய லொத்தர் சபையானது பொருத்தமான மற்றும் சுறுசுறுப்பான தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

1. விற்பனை அதிகாரி -(01 பதவி)
2. கோரல் செயற்படுத்தல் அதிகாரி -(01 பதவி)
3. மக்கள் தொடர்பு அதிகாரி -(01 பதவி)
4. ஊடக ஒருங்கிணைப்பு அதிகாரி -(01 பதவி)
5. பிராந்திய முகாமையாளர் -(01 பதவி)
6. தகவல் தொழில்நுட்ப அதிகாரி -(01 பதவி)
7. கணினி நிரலாளர் -(01 பதவி)

### தேவையான தகுதிகள் மற்றும் அனுபவம்

### 1. <u>விற்பனை அதிகாரி</u>

**<u>வெளிவாரி</u>**

**01.** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் / வியாபார நிருவாகம் / வர்த்தக முகாமைத்துவம் / கலையில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்று **அல்லது** பட்டய சந்தைப்படுத்தல் நிறுவனத்தில் முழுத் தகுதிகள் (சிஐஎம்) / இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் (எஸ்எல்ஐஎம்) ஆகியவற்றில் சந்தைப்படுத்தல் துறையில் பதவிக்குப் பிந்திய ஆகக்குறைந்தது **02 ஆண்டுகள்** தகுதி பெற்ற அனுபவம்

### 02. கோரல் செயற்படுத்தல் அதிகாரி

**<u>வெளிவாரி</u>**

01. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் உரிமம் பெற்ற/இடைநிலை நிலைத்தகுதி (ஐசிஏஎஸ்எல்) **அல்லது** முகாமைத்துவ கணக்காளர்கள் பட்டய நிறுவனம் (சிஐஎ) **அல்லது** சான்றழிக்கப்பட்ட மற்றும் நிறுவன கணக்காளர்கள் சங்கம் (ஏசீசீஏ) **அல்லது** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபார நிருவாகம் / முகாமைத்துவம் அல்லது வர்த்தகத்தில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்று **அல்லது** கணக்கீட்டில் உயர் தேசிய டிப்ளோமா

மற்றும்

ஒரு அரச திணைக்களத்தில்/கூட்டுத்தாபனத்தில்/சபை **அல்லது** புகழ்வாய்ந்த வணிக நிறுவனத்தில் மேலேயுள்ள (1) ஐப் பெற்ற பின்னர் கணக்கீடு மற்றும் நிதித்துறையில் பதவிக்குப் பிந்திய ஆகக்குறைந்த **02 வருட** அனுபவம்

03. **மக்கள் தொடர்பு அதிகாரி**

**வெளிவாரி**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெகுஜன தொடர்பு/பொது நிருவாகம் /மனித வளத்தில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்றுடன் ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது **02 வருட** பதவிக்குப் பிந்திய அனுபவம்

04. **ஊடக ஒருங்கிணைப்பு அதிகாரி**

**வெளிவாரி**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெகுஜன தொடர்பு/சந்தைப்படுத்தல்/விளம்பரம்/கலை (வெகுஜன ஊடக தொடர்பு ஒரு பாடமாக உள்ளடங்கலாக) பெற்ற பட்டதாரிப் பட்டமொன்று / சந்தைப்படுத்தலில் தொழில் ரீதியான தகுதியில் (PQM) தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது **02 வருட** பதவிக்குப் பிந்திய தகுதி அனுபவம்

**உள்ளக விண்ணப்பதாரிகள் பதவி இல 01 இல் இருந்து 04 வரை கீழ் வரும் நிபந்தனைகள் உள்ளடங்கும்**

வெளிவாரித் தகுதிகள் அல்லது தேசிய லொத்தர் சபையில் தொடர்புடைய துறையில் முகாமைத்துவ உதவியாளராக பதவிக்குப் பிந்திய ஆகக்குறைந்தது **05 ஆண்டுகள்** தகுதி பெற்ற அனுபவம் - தொழில்நுட்பமற்ற பிரிவு (எம்ஏ 1-2) தரம் ii

05. **பிராந்திய முகாமையாளர்**

**வெளிவாரி**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (சந்தைப்படுத்தல் / வியாபார நிருவாகம் / வர்த்தகம் / முகாமைத்துவத்தில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்றுடன் ஒரு அரச திணைக்களத்தில்/கூட்டுத்தாபனத்தில்/நியதிச்சட்டசபை அல்லது வணிக நிறுவனத்தில் தொடர்புடைய துறையில் 03 வருட பதவிக்குப் பிந்திய அனுபவம்

**உள்வாரி**

தொடர்பான பதவிக்கு விடய பகுதியில் முகாமைத்துவ உதவியாளராக ஆகக்குறைந்தது 05 வருட திருப்தியான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் - தொழில்நுட்பமற்ற (எம்ஏ 1-2) தரம் ii

**06. <u>தகவல் தொழில்நுட்ப அதிகாரி</u>**

**<u>வெளிவாரி / உள்வாரி</u>**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்று மற்றும் LAN/WAN/, Web Application, Network applications and an extensive knowledge in Security System, Application, Procedures and Techniques and C#, .Net, ASP.Net, SQL Server, Windows Server, Linux, Unix, HTML5, XML, Object Oriented Concept, DB Administration, Crystal Reports போன்றவற்றில் முகாமைத்துவம் செய்யக்கூடிய விதத்தில் ஆகக்குறைந்தது **03 வருட** பதவிக்குப் பிந்திய அனுபவம்
02. தேசிய லொத்தர் சபையில் தொடர்புடைய துறையில் முகாமைத்துவ உதவியாளராக பதவிக்குப் பிந்திய ஆகக்குறைந்தது **05 ஆண்டுகள்** தகுதி பெற்ற அனுபவம் -தொழில்நுட்ப பிரிவு (எம்ஏ 2-2) தரம் ii

**<u>பதவி இலக்கம் 01 இல் இருந்து 06 வரை கீழ் வரும் வயதெல்லை மற்றும் சம்பள அளவுத் திட்டங்கள் பொருந்தும்</u>**

- வயது எல்லை :22 - 45 இற்கிடையில்
  உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லை பொருந்தாது.

- சம்பள அளவுத்திட்டம் :ஜேஎம் 1-1 ரூ:(72,650-10x1,360-18x2,040=122,970)
  (முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல 01/2025 இற்கமைய இந்த சம்பள அளவுத்திட்டம் 01.01.2027 இல் ஆரம்பமாகும்)

**07. <u>கணினி நிரலாளர்</u>**

**<u>வெளிவாரி / உள்வாரி</u>**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில் நுட்பத்தில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்றுடன் முக்கிய தொழில்நுட்ப பகுதிகளில் ஆகக்குறைந்தது 03 வருட பதவிக்குப் பிந்திய அனுபவத்தை விண்ணப்பதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.. அவையாவன ASP.Net, VB6,VC++,C#,Crystal report and SQL server back end.

- வயது எல்லை :18 - 45 இற்கிடையில்

  உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லை பொருந்தாது.

- சம்பள அளவுத்திட்டம் :எம்ஏ 3 ரூ:(53,940-10x800-11x1,190,10x1,320-5x1,350=94,980)
  (முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல 01/2025 இற்கமைய இந்த சம்பள அளவுத்திட்டம் 01.01.2027 இல் ஆரம்பமாகும்)

தெரிவு செய்யப்பட்டவர்கள் சம்பளத்துடன் மாதாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் மருத்துவக் காப்புறுதி வசதிகளுடன் ஏனைய கொடுப்பனவுகளுக்கும் உரித்துடையவர்கள்.

- ஆங்கில அறிவு மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

- **ஆட்சேர்ப்பு நடைமுறை**

எழுத்து போட்டிப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் மற்றும்/அல்லது ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையானது அனைத்துப் பதவிகளுக்கும் நடாத்தப்படும்.

**எழுத்துப் போட்டிப் பரீட்சை,**

பரீட்சைக்கான பாடங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- மொழிப் புலமை
- திறன் பரீட்சை
- பதவிக்கு பொருத்தமான பாட அறிவு
- எழுத்து போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டால் எழுத்துப் பரீட்சையில் பெறப்பட்ட புள்ளிகளில் 60% மற்றும் நேர்முகப் பரீட்சையில் பெறப்பட்ட புள்ளிகளில் 40% ஆகியவற்றின் அடிப்படையில் தகுதி வரிசையில் இறுதித் தெரிவு அமையும்.
- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டால் - நேர்முகப் பரீட்சையின் தகுதியின் அடிப்படையில் மட்டுமே நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

**பொது நிபந்தனைகள்**

-ஒவ்வொரு விண்ணப்பதாரரும்,

i. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
ii. பதவியின் கடமைகளை சிறப்பாக நிறைவேற்றவும் நாட்டின் எப்பகுதியிலும் பணியாற்றவும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதி பெற்றிருக்கவேண்டும்.
iii. சிறந்த ஒழுக்க குணம் கொண்டவராக இருக்க வேண்டும்.

- விண்ணப்பதாரிகள் தொடர்புடைய தகுதிகளை 2025.09.23 இல் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணபித்திருக்கும் பதவியை குறிப்பிடவேண்டும்.
- ஒரு பதவிக்கு மேல் விண்ணப்பிப்பதாயின், வெவ்வேறு விண்ணப்பங்கள் ஒவ்வொரு பதவிக்காகவும் சமர்ப்பிக்கவேண்டும்.
- விண்ணப்ப இறுதித் திகதி 2025.09.23
- இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படமாட்டாதென்பதுடன் தபால் மூலமான தொலைந்த விண்ணப்பங்களுக்கு NLB எந்த விதத்திலும் பொறுப்பாகமாட்டாது.
- எந்த வகையான பிரச்சாரமும் தகுதி நீக்கத்திற்கு வழி வகுக்கும்.
- பணிப்பாளர் சபை மற்றும் ஆட்சேர்ப்புக் குழுவின் முடிவே இறுதி முடிவாகும்.
- இந்த விளம்பரமானது NLB இன் இணையத்தளத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது – www.nlb.lk

**எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும்**

- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தாங்கள் சொந்தமாக தயாரித்த விண்ணப்பங்களை கல்வித்தகுதிகள் தொடர்பான அனைத்து சான்றிதழ்கள், தொழில் முறைத்தகுதிகள், வேலை அனுபவங்கள், பிறப்புச் சான்றிதழ் மற்றும் சேவைச் சான்றிதழ்கள் ஆகியவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் தகுதிகளை நிரூபிக்கக் கூடிய மற்றும் தொடர்பில்லாத இரண்டு நடுவர்களின் பெயர்களையும் சமர்ப்பிக்கவேண்டும்.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் **பொது முகாமையாளர், தேசிய லொத்தர் சபை, இலக்கம் 32, தேசமான்ய என் டபிள்யூ ஜே முதலிகே மாவத்தை, கொழும்பு 01** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.
- மேற்கூறியவற்றுடன் பொருந்தாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- அரச/பொது நிறுவனங்கள்/கூட்டுத்தாபனங்கள்/சபைகள் போன்றவற்றில் ஏற்கனவே உள்ளவர்கள் தங்கள் விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனத் தலைவர் மூலம் அனுப்பவேண்டும்.

**தலைவர்**
**தேசிய லொத்தர் சபை**
**இல 32, தேசமான்ய என் டபிள்யூ ஜே முதலிகே மாவத்தை**
**கொழும்பு 01**